# சிலாங்கூர் இன்று

SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

இலவசம்

SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வரி ஆண்டு சித்திரை மாதம் / ஏப்ரல் 3/2021 APRIL 4/2021


# மரண சகாய நிதி அங்கீகாரம் மக்கள் மனநிறைவு

கோம்பாக் – மரண சகாய நிதிக்கான விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலிக்கப்படுவது குறித்து எஸ்.எம்.யு.இ. எனப்படும் மூத்த குடிமக்கள் உதவித் திட்ட பயனாளர்கள் மனநிறைவு தெரிவித்தனர். தனது தாயாருக்கான உதவி விண்ணப்பம் ஒரு மாதத்திற்கு குறைவான காலத்தில் அங்கீகரிக்கப்பட்டது கண்டு தாம் வியப்படைந்த தாக சுரேஷ் காளிதாசன் (வயது 46) கூறினார். முன்பு தன் தந்தை மறைந்த போது மரண சகாய நிதிக்கு தாயார்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று டுசுன் துவா சட்டமன்றத் தொகுதி சேவை மையத்தின் அதிகாரி தம்மிடம் கூறியதாக அவர் சொன்னார். இந்த திட்டத்தின் கீழ் ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகள் வாயிலாக பயன்பெற முடிகிறது. அதே சமயம் இத்திட்டத்தில் பங்கேற்றவர்கள் காலமானால் அவர்களின் வாரிசுகளுக்கும் மரண சகாய நிதி வழங்கப்படுகிறது என்றார் அவர். கடந்த ஜனவரி மாதம் மறைந்த தன் தாயாரின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்வதற்கு சிலாங்கூர் மாநில அரசினால் வழங்கப்பட்ட மரண சகாய நிதி தங்களுக்கு பெரிதும் துணை புரிந்ததாக வி.எஸ். லூர்துமேரி (வயது 57) கூறினார். இந்த உதவியை வழங்கியதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மறைவுக்குப் பின்னரும் சம்பந்தப்பட்டவரின் வாரிசுகளுக்கு உதவும் வகையில் இந்த திட்டத்தை அமல்படுத்தி வருகிறது என்று அவர் தெரிவித்தார். இங்குள்ள தாமான் ஜாசா உத்தாமாவில் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமையில் நடைபெற்ற மரண சகாய நிதி வழங்கும் நிகழ்வின போது செய்தியாளர்களிடம் அவர்கள் இவ்வாறு கூறினர். ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுத் திட்டம் மற்றும் 500 வெள்ளி மரண சகாய நிதி ஆகிய இரு திட்டங்களை உள்ளடக்கும் வகையில் மூத்த குடிமக்கள் உதவித் திட்டம் மேம்படுத்தப்படுவதாக மந்திரி புசார் கடந்த ஜனவரி மாதம் கூறியிருந்தார். பொது மக்கள் e-mesra.yawas.my எனும் அகப்பக்கம் வாயிலாக இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.





டுசுன் டுரியான் தோட்ட வீடமைப்புத் திட்டப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும்- சிலாங்கூர் அரசு உறுதி

பக்கம் 3

வருடாந்திர மானியத்தை விவேகத்துடன் பயன்படுத்துவீர்- இந்திய சமூகத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

பக்கம் 5

செம்பாக்கா அடுக்குமாடி குடியிருப்பு சீரமைப்புப் பணிகளுக்கு 600,000 வெள்ளி ஒதுக்கீடு

பக்கம் 9



selangor kini apr 2021.indd 1 02-Apr-21 9:04:27 PM

# 7,919 பேருந்து, டாக்சி ஓட்டுநர்களுக்கு பொருள் விநியோகம்



ஷா ஆலம் – சிலாங்கூரிலுள்ள 7,919 பேருந்து மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியத்திடமிருந்து உணவு உதவிப் பொருள்களைப் பெறுவர். மாநில அரசின் கீழுள்ள மக்கள் வீடமைப்புத் திட்ட (பி.பி.ஆர்.) குடியிருப்புகளில் வசிக்கும் 2,635 பேரும் லெம்பா சுபாங் 1, பி.பி.ஆர். குடியிருப்பில் வசிக்கும் 3,004 பேரும் இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவர் என்று அவ்வாரியத்தின் நிர்வாக இயக்குநர் டத்தோ டாக்டர் ஜூஹாரி அகமது கூறினார்.

வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியத்தின் மேற்பார்வையில் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி வரும் ஜூலை மாதம் வரை மேற்கொள்ளப்படும் இந்த பரிவுத் திட்டத்திற்காக மாநில அரசு 10 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் பேருந்து மற்றும் டாக்சி ஓட்டுநர்களுக்கு 50 வெள்ளி முதல் 100 வெள்ளி வரை வழங்கப்படும். இதுதவிர சிலருக்கு 50 வெள்ளிக்கான பற்றுச்சீட்டுகளும் வழங்கப்படும். அந்த பற்றுச்சீட்டைப் பயன்படுத்தி 99 ஸ்பீட்மார்ட் கடைகளில் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உதவும் வகையில் கித்தா சிலாங்கூர் உதவித் திட்டத்தின் கீழ் இந்த உணவு உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

# ஐந்து வகையான தடுப்பூசிகள் மீது சிலாங்கூர் ஆய்வு




ஷா ஆலம் – மத்திய அரசு கொள்முதல் செய்வதற்காக அளிப்பாணை கொடுத்துள்ள ஐந்து கோவிட்-19 தடுப்பூசிகள் மீது சிலாங்கூர் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. மாநில மக்களின் தேவைக்காக சொந்தமாக தடுப்பூசியை வாங்குவ தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்கு முன்னர் எத்தகைய தடுப்பூசி பொருத்தமானது என்பதை தீர்மானிப்பதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

தடுப்பூசியை கொள்முதல் செய்வது மற்றும் பொதுமக்களுக்கு செலுத்துவது ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் அந்த தடுப்பூசியின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக அவர் சொன்னார். பொருத்தமான நேரத்தில் அந்த தடுப்பூசியை நாம் பெறுவோம். இவ்விவகாரத்தில் அவசர கதியில் செயல்படவோ முறையான வழி முறைகளைப் பின்பற்றாமல் செயல்படவோ நாம் விரும்பவில்லை. இத்தகைய செயல்கள் நோய்த் தொற்றிலிருந்து விடுபடுவதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளை பாதித்து விடும் என்றார் அவர்.

தடுப்பூசியை கொள்முதல் செய்யும் பணியில் தற்போது நாம் எந்த பிரச்னையையும் எதிர்நோக்கவில்லை. இவ்விவகாரத்தில் அனைத்துத் தரப்பினருடனான ஒத்துழைப்பு சுமூகமாக உள்ளது. நோய்த் தொற்றை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக தடுப்பூசியை விரைந்து கொள்முதல் செய்ய முடியும் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சர் கைரி ஜமாலுடினுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். சிலாங்கூர் அதிக தொழிலாளர்களையும் தொழில்துறைகளையும் கொண்ட மாநிலமாக விளங்குவதால் கோவிட்-19 தடுப்பூசிகளை சொந்தமாக வாங்க முடிவெடுக்கப் பட்டதாகவும் அவர் விளக்கினார். இம்மாநிலத்தில் அதிக தொழிற்சாலைகளும் 30 லட்சம் தொழிலாளர்களும் உள்ளனர். நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்கு கடுமையான பாதிப்பு உண்டாகும் என்று மேலும் குறிப்பிட்டார்.

# தடுப்பூசி வாங்க 10 கோடி வெள்ளி ஒதுக்கீடு சிலாங்கூர் அரசு அங்கீகாரம்




ஷா ஆலம் – தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை விரைவுபடுத்துவதில் உதவும் வகையில் சொந்தமாக தடுப்பூசிகளை வாங்க சிலாங்கூர் அரசு 10 கோடி வெள்ளி நிதி ஒதுக்கீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த தடுப்பூசி தற்போது தேசிய மருந்தக ஒழுங்கு முறை பிரிவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் வரும் மே அல்லது ஜூன் மாதவாக்கில் அதற்கான அங்கீகாரம் கிடைத்து விடும் என்றும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் சரியான தடத்தில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். எந்த தடுப்பூசியைக் கொள்முதல் செய்வது என்பது தீர்மானிக்கப்பட்டு விட்டது. எனினும், அது கிடைக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்றார் அவர். அந்த தடுப்பூசி சுகாதார அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட ஐந்து வகை தடுப்பூசிகளில் ஒன்று எனக் குறிப்பிட்ட அவர், மருந்தக ஒழுங்கு முறை பிரிவின் அங்கீகாரத்திற்குப் பிறகே அதன் பெயர் வெளியிடப்படும் என்றார்.

இங்குள்ள ஷா ஆலம் மருத்துவமனைகளில் இரண்டாவது டோஸ் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கோவிட்-19 நோய்த் தொற்றை விரைந்து கட்டுப்படுத்தும் நோக்கிலும் இவ்விவகாரத்தில் மத்திய அரசின் சுமையைக் குறைக்கும் வகையிலும் சிலாங்கூர் மாநில அரசு சொந்தமாக தடுப்பூசியை வாங்கும் என்று அமிருடின் முன்னதாக அறிவித்திருந்தார்.

# டுசுன் டுரியான் தோட்ட வீடமைப்புத் திட்டப் பிரச்னைக்கு

## தீர்வு காணப்படும்- சிலாங்கூர் அரசு உறுதி



பந்திங், மார்ச் 22- கடந்த 2006ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பந்திங், டுசுன் டுரியான் தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு திட்டப் பிரச்னைக்கு சிலாங்கூர் அரசு தீர்வு காணவுள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் இணக்கப் போக்கு காணப்படுவதற்கு ஏதுவாக அந்த வீடமைப்புத் திட்ட மேம்பாட்டாளர் மற்றும் நில உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். அந்த சந்திப்பு தோல்வியில் முடிந்தால் மாநில அரசு நில உரிமை விவகாரத்திற்கு முதலில் தீர்வு காணும். பின்னர் அந்த வீடமைப்புத் திட்டத்திற்கு புத்துயிரூட்டுவதற்கு ஏதுவாக நிலம் கையகப்படுத்தப்படும் என்றார் அவர். இங்குள்ள ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில்



வீடமைப்புத் திட்ட நடவடிக்கை குழுவினருடன் சந்திப்பு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான பல பிரச்னைகளுக்கு தீர்வு கண்ட அனுபவம் மாநில அரசுக்கு உள்ளதால் இவ்விவகாரத்திற்கும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை தங்களுக்கு உள்ளதாக அவர் சொன்னார். கோல்டன் ஹோப் பிளாண்டாடேஷன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பத்து ஏக்கர் நிலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளும் பொறுப்பை பெர்மாய் சென். பெர்ஹாட் நிறுவனம் ஏற்றிருந்தது.

# கித்தா சிலாங்கூர் திட்டம் மக்கள் பிரதிநிதிகள் மானியம் வாயிலாக 40,000 பேர் பயன்



ஷா ஆலம் — கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வாயிலாக மாநில சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தின் மூலம் கடந்த மார்ச் 15ஆம் தேதி வரை 41,104 பேர் பயனடைந்துள்ளனர். கடந்த மார்ச் மாதம் 8ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 34,903ஆக இருந்ததாக மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவின் கித்தா சிலாங்கூர் திட்ட வாராந்திர மேம்பாட்டு அறிக்கை கூறியது. மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கான 20 லட்சத்து 70 ஆயிரம் வெள்ளி ஒதுக்கீட்டின் வழி மேற்கொள்ளப்பட்ட 351 திட்டங்கள் வாயிலாக 35,345 பேர் பயனடைந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 355,277 வெள்ளி ஒதுக்கீட்டின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட 65 திட்டங்கள் மூலம் 5,759 பேர் பயன் பெற்றுள்ளனர். பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை மேற்கொள்வதற்காக சிலாங்கூர் மாநில அரசு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர்களுக்கு தலா ஒரு லட்சம் வெள்ளியும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா ஐம்பதாயிரம் வெள்ளியும் வழங்கியது. இது தவிர்த்து, நாடி எனப்படும் ஸ்கிம் நியாகா டாருள் ஏசான் திட்டத்திற்கு செய்யப்பட்ட 457,000 வெள்ளி மதிப்பிலான 123 விண்ணப்பங்களை ஹிஜ்ரா சிலாங்கூர் அங்கீகரித்துள்ளது. மேலும் 189 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

# மாற்றுத் திறனாளி பிள்ளைகள் உதவித் திட்டத்திற்கு

## விண்ணப்பம் செய்வீர் - கல்வி ஸ்தபானங்களுக்கு வேண்டுகோள்

ஷா ஆலம் – அனிஸ் எனப்படும் சிலாங்கூர் சிறப்பு பிள்ளைகள் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யும்படி மாற்றுத் திறனாளிகள் கல்விக் கூடங்கள் மற்றும் சமூக மறுவாழ்வு மையங்களை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கேட்டுக் கொண்டுள்ளார். சமூக நல இலாகா மற்றும் கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கான அமைப்புகளுக்கு ஒரு முறை வழங்கும் வகையில் நிதியுதவித் திட்டத்தை மாநில அரசு கொண்டுள்ளதாக அவர் சொன்னார். சிலாங்கூர் மாநிலத்திலுள்ள சிறப்பு பிள்ளைகளுக்கான தொடக்க இடர் திட்டங்களை அமல்படுத்தும் அமைப்புகள் இந்த நிதியுதவிக்கு விண்ணப்பம் செய்யலாம் என்றார் அவர். தங்கள் மையத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கு மேலும் ஆக்ககரமான மற்றும் முறையான கல்வித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இந்த நிதியுதவி பெரிதும் துணை புரியும் என்று அவர் மேலும் சொன்னார். இந்த அனிஸ் திட்டத்திற்கு யாவாஸ் எனப்படும் யாயாசான்




அனாக் வாரிசான் சிலாங்கூர் அமைப்பின் வாயிலாக ஐந்து லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறிய அவர், ஒவ்வொரு அமைப்பும் கூடுதல் பட்சம் பத்தாயிரம் வெள்ளி வரை விண்ணப்பம் செய்யலாம் என்றார். ஆர்வமுள்ள அமைப்புகள் http://www.anisselangor.com/didikan-is என்ற அகப்பக்கம் வாயிலாக வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் தேதிக்குள் இந்த நிதிக்கான விண்ணப்பத்தை செய்யலாம். அமைப்பின் பதிவு சான்றிதழ் நகல், சமூக நல இலாகா மற்றும் கல்வியமைச்சின் பதிவு நகல், தங்கள் அமைப்பில் தங்கி பயிற்சி பெறுவோரின் பெயர்ப் பட்டியல் மற்றும் ஆகக் கடைசி வங்கிக் கணக்கு அறிக்கையின் நகல் ஆகியவற்றையும் விண்ணப்பதாரர்கள் சமர்பிக்க வேண்டும்.

selangor kini apr 2021.indd 3 02-Apr-21 9:04:29 PM

# சுற்றுலாத் துறைக்கு உத்வேகமளிக்க 13 எஸ்.ஒ.பி. விதிமுறைகள் அமல்



கோலாலம்பூர் – சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை புதிய இயல்பில் செயல்படுவதற்கு ஏதுவாக 13 நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை (எஸ்.ஓ.பி.) சுற்றுலா, கலை மற்றும் கலாசாரத் துறை அமைச்சு வரைந்துள்ளது.


கோவிட்-19 நோய்ப் பரவல் காலத்தில் சுற்றுலாத் துறையினர் தொடர்ந்து தாக்குப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக இந்த எஸ்.ஓ.பி. நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் அமைச்சர் டத்தோ நான்சி சுக்ரி கூறினார்.

இந்த பெருந் தொற்று காலத்தில் சுற்றுலாத் துறைக்கு புத்துயிரளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பொதுமக்களுக்கும் சுற்றுலாத் துறையினருக்கும் இந்த எஸ்.ஓ.பி ஒரு வழிகாட்டியாக விளங்கும் என்றார் அவர்.

தங்கும் விடுதிகள், பொழுது போக்கு பூங்காக்கள், சுற்றுலா நிறுவனங்கள் உள்பட இத்துறை சார்ந்த அனைத்துத் தரப்பினரையும் சுற்றுலா அமைச்சையும் உள்படுத்தும் வகையில் இந்த விதிமுறைகள் அமல் செய்யப்படும் என்று அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காலத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டத் துறையாக சுற்றுலாத் துறை விளங்குவதை சுட்டிக்காட்டிய அவர், அத்துறை தொடர்ந்து தாக்குப் பிடிப்பதற்கும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கும் ஏதுவாக அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

# கட்டுமானப் பகுதிகளில் பாதுகாப்புக்கு சிலாங்கூர் அரசு முன்னுரிமை



ஷா ஆலம் – பொது கட்டுமானப் பகுதிகளில் பாதுகாப்புக்கு சிலாங்கூர் அரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது.

விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வதை தவிர்ப்பதற்காக எந்நேரமும் கவனப்போக்குடன் செயல்படும்படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் தரப்பினர் அறிவுறுத்தப் படுவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹாஷிம் கூறினார். விபத்துகள் நிகழும் பட்சத்தில் சாலைகளைப் பயன்படுத்துவோரே அதிகம் பாதிக்கப்படுவது விசாரணைகள் வழி தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பணியிடங்களில் கடைபிடிக்க வேண்டிய முறையான நிர்வாக நடைமுறைகளை (எஸ்.ஓ.பி.) நாம் கொண்டுள்ளோம். எனினும் மனிதர்களுக்கே இயல்பாக ஏற்படும் மறதி அல்லது அலட்சியப் போக்கு காரணமாக இத்தகைய விபத்துகள் ஏற்படுகின்றன என்றார் அவர். சுங்கை பீசி–உலு சிளாங் அடுக்குச் சாலை நிர்மாணிப்புப் பகுதியில் கிரேன் விழுந்த சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த நெடுஞ்சாலையின் கட்டுமானம் தாமதமான நிலையில் அதனை விரைந்து முடிப்பதற்காக நேர காலம் பார்க்காமல் ஊழியர்கள் பணியில் ஈடுபட்டதால் ஏற்பட்ட சோர்வு இவ்விபத்து ஏற்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பணியிடங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தமது தரப்பு மலேசிய நெடுஞ்சாலை வாரியத்துடன் விவாதித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

கோலாலம்பூர், ஜாலான் அம்பாங் டாமாய் பகுதியிலுள்ள கட்டுமானத் தளத்தில் 40 மீட்டர் உயரம் கொண்ட கிரேன் சாலையில் விழுந்த சம்பவத்தில் ஐவர் இடிபாடுகளில் சிக்கினர்.

இவ்விபத்தில் இரு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் உயரிழந்ததோடு மேலும் மூவர் காயங்களுக்குள்ளாயினர்.

# உணவு உதவித் திட்டத்திற்கு மேரு தொகுதி 100,000 வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் – கோவிட்-19 நோய்ப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட வசதி குறைந்த குடும்பங்களுக்கு உணவு உதவித் திட்டத்தை மேற்கொள்ள மேரு சட்டமன்றத் தொகுதி ஒரு லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. வசதி குறைந்த பி40 பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் மற்றும் வேலை இழந்தவர்களை இலக்காக கொண்டு இந்த உணவு உதவித் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஃபக்ருள்ராஸி முகமது கூறினார். இத்திட்டத்தின் வாயிலாக இரண்டாயிரம் பேருக்கு உதவிகள் வழங்க தாங்கள் திட்டமிட்டுள்ளதாக கூறிய அவர், இதன் வழி பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார சுமையை ஓரளவு குறைக்க முடியும் எனத் தாங்கள் நம்புவதாக குறிப்பிட்டார். இந்த உணவு உதவித் திட்டம் கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படும். இந்த உணவுப் பொருள்கள் நேரடியாகவோ கிராம சமூக அமைப்புகளின் வாயிலாகவோ சம்பந்தப்பட்டவர்களிடம் சேர்க்கப்படும் என்றார் அவர். உணவு உதவி தவிர்த்து, மக்களின் தேவையின் அடிப்படையில் இதர வகையான உதவிகளை வழங்குவது குறித்து சூழலுக்கேற்ப முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எனினும், மருத்துவ, வர்த்தக மற்றும் ஆலோசக உதவிகளை மேரு வட்டார மக்களுக்கு தாங்கள் தொடர்ந்து வழங்கி வருவதாகவும் இத்தகைய உதவிகளைப் பெற விரும்புவோர் மேரு சட்டமன்ற தொகுதி சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் சொன்னர்.

# கின்ராரா தொகுதி ஏற்பாட்டில 100 பேருக்கு மடிக்கணினிகள் விநியோகம்



ஷா ஆலம் – இலக்கவியல் இடைவெளியைக் குறைக்கும் விதமாக கின்ராரா சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 100 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. பிள்ளைகளின் கல்வியை நடவடிக்கைகளை எளிதாக்கும் வகையில் குறைந்த வருமானம் பெறும் பி40 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உதவித் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். இந்த மடிக்கணினி திட்டத்திற்கு 500 விண்ணப்பங்கள் கிடைத்த போதிலும் இதுவரை தகுதியுள்ள 100 குடும்பங்களுக்கு மட்டுமே அந்த கணினிகள் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். நாங்கள் விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்குச் சென்று விரிவான ஆய்வை மேற்கொள்ளவுள்ளோம். சரியான தரப்பிடம் உதவிகள் சென்று சேர்வதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறை இதுவாகும் என்றார் அவர். இதனிடையே, கடந்தாண்டு அறிமுகப்படுத்தப்பட்ட டாப்போர் கின்ராரா எனப்படும் மதிய உணவு விநியோகத் திட்டத்திற்கு பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாக அவர குறிப்பிட்டார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை வசதி குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக உணவு வழங்கி வருகிறோம். கடந்த வாரம்கூட 200க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை விநியோகம் செய்தோம் என்றார் அவர்.

# செக்சன் 7, அடுக்குமாடி குடியிருப்பின் பழுதடைந்த கூரைகள் விரைவில் பழுதுபார்க்கப்படும்



ஷா ஆலம் – இங்குள்ள செக்சன் 7, சிலாங்கூர் மாநில மேம்பாட்டுக் கழக (பி.கே.என்.எஸ்.) மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பின் 58 வீடுகளின் கூரைகளில் ஏற்பட்டுள்ள பழுது விரைவில் சரி செய்யப்படும். பழுதுபார்ப்புப் பணிகள் அல்லது கூரைகளை மாற்றும் பணி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக அக்கூரைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பை ஷா ஆலம் மாநகர் மன்றம் மதிப்பீடு செய்யும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். ஒரு புளோக் கட்டிடத்தில் 60 வீடுகள் உள்ள நிலையில் இந்த பாதிப்பு பல குடும்பங்களை உட்படுத்தியுள்ளது. ஆகவே, தீர்வுக்கான சரியான வழி முறையை நாம் ஆராயவேண்டியுள்ளது. இந்த பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ள இரண்டு லட்சம் வெள்ளிக்கும் மேல் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர். பழுதுபார்ப்பு பணிகளுக்கு உண்டாகும் செலவு உள்பட அனைத்து அம்சங்கள் மீதும் மாநகர் மன்றம் மேற்கொண்டு வரும் ஆய்வின் முடிவுக்காக நாம் காத்திருக்கிறோம். அந்த ஆய்வின் முடிவுகள் கிடைத்தப் பின்னரே அடுத்தக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் சொன்னார். செக்சன் 7இல் உள்ள பாதிக்கப்பட்ட அந்த புளோக் 48 குடியிருப்பு பகுதிக்கு வருகை புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No. 1, Jalan Indah 14/ 8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

## வருடாந்திர மானியத்தை விவேகத்துடன் பயன்படுத்துவீர்

# இந்திய சமூகத் தலைவர்களுக்கு அறிவுறுத்து




ஷா ஆலம் – தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருடாந்திர மானியத்தை மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதில் விவேகமாக செயல்படும்படி புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய சமூகத் தலைவர்கள் (கே.கே.ஐ.) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மாநில அரசினால் வழங்கப்படும் 10,000 வெள்ளி ஆண்டு மானியத்தை அவர்கள் முறையாக நிர்வகிக்க வேண்டும் என்தோடு உதவி வழங்குவதில் கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்பட யாரும் விடுபடாமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் நினைவுறுத்தினார்.

தங்களுக்கு வழங்கப்பட்ட பதவி கடப்பாடும் பொறுப்புணர்வும் கொண்டது என்பதை சமூகத் தலைவர்கள் உணர வேண்டும். இதனை தங்களுக்கு வழங்கப்பட்ட பரிசாக யாரும் கருதக்கூடாது. தங்களின் செயல்பாடுகளை குறிப்பாக நிதியை நிர்வகிப்பது தொடர்பான விஷயங்களை மக்கள் அணுக்கமாக கவனித்து வருவர் என்பதை எந்நேரமும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

புதிதாக நியமனம் செய்யப்பட்ட சமூகத் தலைவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை முறையாக பயன்படுத்துவர் என்பதோடு தங்கள் பணியில் உயர் நம்பகத் தன்மையையும் நாணயத்தையும் கடைபிடிப்பர் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று இங்குள்ள ஜூப்ளி பேராக் அரங்கில் சமூகத் தலைவர்களுக்கு பதவி நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வுக்கு தலைமையற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் கூறினார். 2021-2022ஆம் ஆண்டு தவணைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 50 சமூகத் தலைவர்களுக்கு இந்நிகழ்வில் நியமனக் கடிதங்களை கணபதிராவ் வழங்கினார். செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் உள்ளிட்ட தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். சமூகத் தலைவர்கள் தங்கள் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை சம்பந்தப்பட்டத் தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுச் செல்லும் அதேவேளையில் அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் சேர்ப்பிக்கும் தொடர்பாளர்களாகவும் செயல்பட வேண்டும் என்று கணபதிராவ் வலியுறுத்தினார்.

மத்திய மற்றும் மாநில அரசுகள் அமல்படுத்தும் சுகாதாரம், கல்வி, சமூகநலன் தொடர்பான உதவிகள் குறித்த தவல்களை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் பொறுப்பும் சமூகத் தலைவர்களுக்கு உள்ளது என்றார் அவர்.

பலதரப்பட்ட உதவித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை நாங்கள் கூட (சட்டமன்ற உறுப்பினர்கள்) அறியாமல் இருக்கலாம். இத்தகைய விஷயங்களை நன்கு அறிந்திருக்கும் பட்சத்தில் அவர்களால் பொதுமக்களுக்கு உதவிகளை வழங்க இயலும் என்று அவர் மேலும் சொன்னார்.

# காசநோய் சிகிச்சையைத் தீவிரப்படுத்த வெ. 10 லட்சம் ஒதுக்கீடு- சித்தி மரியா தகவல்




ஷா ஆலம் – காசநோய் சிகிச்சையை தீவிரப்படுத்துவதற்காக இவ்வாண்டில் பத்து லட்சம் வெள்ளியை சிலாங்கூர் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த ஒதுக்கீட்டின் வாயிலாக சுமார் இரண்டாயிரம் காசநோயாளிகள் சிகிச்சை பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று சுகாதார துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

காசநோயின் அபாயம் குறித்து பொதுமக்களில் பலர் இன்னும் அறியாமல் இருப்பதாக அவர் சொன்னார்.

காசநோயாளிகளில் பலர் ஆறு மாதகால சிகிச்சையை முழுமையாக முடிக்காத காரணத்தால் அந்நோய்ப் பரவலுக்கு தீர்வு காண முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்த ஆபத்தான நோயை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக பொதுமக்கள் மாநில அரசின் இந்த சிகிச்சைத் திட்டத்தின் வாயிலாக தொடர் சிகிச்சைகளைப் பெற்று பயன்பெறும்படி கேட்டுக் கொள்கிறோம் என்றார் அவர்.

இவ்விவாகரத்தில் ஊராட்சி மன்றங்களும் தங்களின் சுகாதாரப் பிரிவுகளின் பணியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குடியிருப்புகளில் சுகாதாரம் தொடர்பான சோதனைகளை மட்டும் மேற்கொள்வதில் அவர்கள் கவனம் செலுத்தக்கூடாது. மாறாக, அந்நோய்த் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்ட வேண்டும் என அவர சொன்னார்.

# நோன்புப் பெருநாளுக்குப் பின்னர் வேலை வாய்ப்புச் சந்தை தொடரும்




ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசினால் நடத்தப்படும் வேலை வாய்ப்புச் சந்தை இவ்வாண்டு நோன்பு பெருநாளுக்குப் பிறகு தொடரப்படும் என்று இளம் தலைமுறையினர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் கைருடின் ஒத்மான் கூறினார்.

மாவட்ட அளவில் இந்த வேலை வாய்ப்புச் சந்தையை நடத்த தாங்கள் திட்டமிட்டுள்ளதாகவும் எனினும், நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் நடப்பு நிலவரம் மற்றும் சம்பந்தப்பட்டத் தரப்பினர் வழங்கும் அனுமதி ஆகியவற்றைப் பொறுத்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


ஒரு வேளை மாவட்ட எல்லைகளைக் கடப்பதற்கான அனுமதியை தேசிய பாதுகாப்பு மன்றம் ரத்து செய்தால் இந்த வேலை வாய்ப்புச் சந்தையை ஷா ஆலமில் மட்டும் நடத்த வேண்டி வரும் என்றார் அவர்.

கல்வித் தகுதிக்கேற்ப பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகளை இந்த வேலை வாய்ப்புச் சந்தை ஏற்படுத்தித் தருவதால் இத்திட்டம் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக காணப்படுகிறது என்று அவர் சொன்னார்.

கடந்தாண்டு செப்டம்பர் மாதம் தொடங்கிய வேலை வாய்ப்புச் சந்தையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஷா ஆலம், கோல சிலாங்கூர், சுங்கை பூலோ, உலு லங்காட், கோம்பாக் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த வேலை வாய்ப்புச் சந்தையில் 105 முதலாளிகளும் பங்கு கொண்டனர்.

வேலையின்மைப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக 2021ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் வாயிலாக 15,000 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்தாண்டு டிசம்பர் மாதம் கூறியிருந்தார்.

# தடுப்பூசித் திட்டத்திற்கு மூத்த குடிமக்களை பதிவு செய்வதில் எஸ்.டி.எ.ஃ.ப்.சி. உதவி



ஷா ஆலம் – கோவிட்-19 தடுப்பூசியை பெறும் திட்டத்தில் மூத்த குடிமக்கள் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்வதில் சிலாங்கூர் மாநில கோவிட்-19 பணிக்குழு தேவையான உதவிகளைச் செய்யும். தற்போது 90 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தில் தங்களைப் பதிந்து கொள்ளவில்லை என்று அப்பணிக்குழுவின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் ஜுல்கிப்ளி அகமது கூறினார். மைசெஜாத்ரா செயலி இல்லாதது, இணைய சேவை பிரச்னை மற்றும் இணையம் வாயிலாக பதிவு செய்யும் வழிமுறையை அறிந்திராதது ஆகிய காரணங்களால் அவர்களால் இந்த பதிவு நடவடிக்கையில் பங்கு கொள்ள முடியவில்லை என்று அவர் சொன்னார். இத்தகைய தரப்பினரை இணையம் வாயிலாகவும் வழக்கமான நடைமுறையிலும் பதிவு செய்வதற்கான நடவடிக்கையை சிலாங்கூர் மாநில அரசின் உதவியுடன் மேற்கொள்ள தாங்கள் தயாராக உள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சருமான அவர் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பில் மாநில அரசு தற்போது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொடக்க கட்டமாக தடுப்பூசித் திட்டத்திற்கான பதிவை மேற்கொள்வதில் உதவிகளை வழங்கவிருக்கிறோம் என்றார் அவர். இந்த தடுப்பூசி பதிவு நடவடிக்கையில் கிராம மேம்பாட்டு நிர்வாக மன்றங்களுடன் தாங்கள் இணைந்து செயல்படவுள்ளதாகவும் அவர் சொன்னார்.


# ஸ்ரீ மூடா மார்க்கெட் வியாபாரிகளுக்கு லைசென்ஸ் கட்டண விலக்களிப்பு



ஷா ஆலம் – இங்குள்ள தாமான் ஸ்ரீ மூடா நவீன மார்க்கெட் வியாபாரிகளுக்கு ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக லைசென்ஸ் கட்டண விலக்களிப்பு வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் மாநில அரசின் நோக்கத்திற்கேற்ப இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார். ஷா ஆலம் மாநகர் மன்றம் இங்குள்ள வணிகர்களுக்கு 150 வெள்ளி முதல் 200 வெள்ளி வரையிலான லைசென்ஸ் கட்டண விலக்களிப்பை ஓராண்டு காலத்திற்கு வழங்கும் என்று அவர் தெரிவித்தார். கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக கடுமையான வருமான இழப்பை எதிர்நோக்கியுள்ள வணிகர்களின் நிலையை கருத்தில் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டது என்றார் அவர். நேற்று தாமான் ஸ்ரீ மூடா நவீன மார்க்கெட்டை அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். சுமார் 2 கோடியே 80 லட்சம் வெள்ளி செலவிலான இந்த மார்க்கெட் நான்கு ஆண்டு கால நிர்மாணிப்புக்குப் பின்னர் கடந்த டிசம்பர் மாதம் முழுமையடைந்ததாக ஷா ஆலம் டத்தோ பண்டார் டத்தோ ஹரிஸ் காசிம் கூறினார். சாய்வு நிலையிலான இந்த மார்க்கெட்டின் அமைப்பு முறை வாடிக்கையாளர்கள் படிகளைப் பயன்படுத்தாமல் மேல் மாடிக்குச் செல்வதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சொன்னார். இந்த மார்க்கெட்டில் 60 ஹலால் உணவு பொருள்களை விற்கும் கடைகள் நான்கு ஹலால் அல்லாத உணவு பொருள் கடைகள், 56 உலர்ந்த உணவுப் கடைகள், 79 உணவு மற்றும் பான விற்பனைக் கடைகள் உள்பட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சிலாங்கூர்-ஜப்பான் நட்புறவு பூங்கா

## ஷா ஆலமில் திறக்கப்பட்டது



ஷா ஆலம் – இங்குள்ள மெர்டேக்கா சதுக்கம் அருகே நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலாங்கூர்–ஜப்பான நட்புறவு பூங்கா பொதுமக்களுக்கு திறக்கப்பட்டது. இந்த பூங்கா 2.428 ஹெக்டர் நிலப்பரப்பில் சுமார் 38 லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்பட்டதாக ஷா ஆலம் டத்தோ பண்டார் டத்தோ ஹரிஸ் காசிம் கூறினார். இதன் கட்டுமானப் பணிகள் கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்தாண்டு முற்றுப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூரை தனது முதன்மை முதலீட்டாளராக தொடர்ந்து வைத்திருக்கும் ஜப்பான் அரசின் கடப்பாட்டை அங்கீகரிக்கும் வகையில் இந்த நட்புறவு பூங்கா அமைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அமல் செய்யப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக இந்த பூங்கா திறக்கப்படுவதில் சற்று தாமதம் ஏற்பட்டது என்று அதன் திறப்பு விழாவுக்கு தலைமையேற்று உரையாற்றிய போது அவர் தெரிவித்தார்.

இந்த பூங்கா ஜப்பானிய கலை மற்றும் கலாசார அம்சங்களைக் கொண்டுள்ளதோடு அதன் வேலிகளும் மூங்கில்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இந்த பூங்காவை பொதுமக்கள் தினசரி காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை இலவசமாக பார்வையிடலாம்.

# இரண்டு கட்ட தடுப்பூசிகளையும்

## அதிகம் பெற்ற மாநிலம் சிலாங்கூர்

கோலாலம்பூர் : தேசிய கோவிட் -19 நோய்த்தடுப்பு திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியில் மொத்தம் 241,758 நபர்கள் தங்களது தடுப்பூசி ஊசி மருந்துகளின் இரண்டு டோஸ்களையும் நேற்று நிலவரப்படி பூர்த்தி செய்துள்ளனர். இதே காலகட்டத்தில் 498,468 நபர்கள் முதல் டோஸைப் பெற்றுள்ளதாகவும், நாட்டில் மொத்தம் முதல் மற்றும் இரண்டாவது டோஸ் கோவிட் -19 தடுப்பூசியை 740,226 ஆகக் கொண்டு வந்ததாகவும் சுகாதார அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஆதாம் பாபா தெரிவித்தார். இன்று தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பகிரப்பட்ட ஒரு விளக்கப்படத்தில், டாக்டர் ஆதாம், தடுப்பூசியின் முதல் டோஸை 69,852 ஆகப் பெற்ற மிக உயர்ந்த மாநிலமாக சிலாங்கூர் திகழ்கிறது என்றும், அதைத் தொடர்ந்து பேராக் (49,996) மற்றும் சரவாக் (48,079) உள்ளனர் என்றும் கூறினார். சபா 46,023, கோலாலம்பூர் (44,702), ஜொகூர் (39,624), பஹாங் (33,693), பினாங்கு (33,045), கெடா (30,316), நெகிரி செம்பிலான் (24,690), திராங்கானு (24,516), கிளாந்தன் (22,596) , பெர்லிஸ் (9,846), புத்ராஜெயா (5,233), லாபுவன் (2,499). இதற்கிடையில், கோவிட் -19 இரண்டாம் கட்ட தடுப்பூசி ஊசி பெற்ற தனிநபர்களின் எண்ணிக்கையில் சிலாங்கூர் அதாவது 28,616, சரவாக் (25,287) மற்றும் கோலாலம்பூர் (23,899) ஆகிய இரண்டு டோஸ்களை அதிகம் பெற்ற மாநிலங்களாக விளங்குகிறன. இதற்கிடையில், தேசிய கோவிட் -19 நோய்த்தடுப்பு திட்டத்திற்கான பதிவுகளின் எண்ணிக்கை 7,625,478 அல்லது 31.4 சதவீதமாக இருந்தது, சிலாங்கூர் அதிகபட்சமாக 2,085,983 பதிவு செய்துள்ளது.

# 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள்
## வாக்களிப்பதற்கான அனுமதியை ஒத்தி வைப்பதா?

ஷா ஆலம் – பதினெட்டு வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் தகுதி வழங்குவது மற்றும இயல்பாக வாக்காளர்களாக பதிவு செய்வது ஆகியவற்றை அமல்படுத்துவதை ஒத்தி வைக்கும் நடவடிக்கை மக்களவை மற்றும் மேலவையின் முடிவுக்கு எதிரானது என பக்கத்தான் ஹராப்பான் (நம்பிக்கை கூட்டணி) தலைவர் மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்விரு அம்சங்களின் அமலாக்கத்தையும் தேர்தல் ஆணையம் இவ்வாண்டு ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து அடுத்தாண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது குறித்து தாங்கள் ஏமாற்றமடைவதாக அது கூறியது. இந்நடவடிக்கை மக்கள் குரலை புறந்தள்ளும் வகையில் உள்ளதோடு இளைஞர்களின் உரிமைகளையும் மறுப்பதாக அமைந்துள்ளது என்று பக்கத்தான் தலைவர்கள் கூட்டாக வெளியிட்ட அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒத்திவைப்பு நடவடிக்கைக்கு தேர்தல் ஆணையம் முழு பொறுப்பேற்க வேண்டும். இது பெரும் தோல்வியை புலப்படுத்துவதோடு மலேசிய அரசிலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாகவும் அமைந்துள்ளது. 18 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படாமல் 15வது பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் 38 லட்சம் இளைஞர்களின் உரிமைகளை பறிக்கப்படும் என்பதோடு இளம் தலைமுறையினருக்கு பெரிக்காத்தான் நேஷனல் அரசாங்கம் செய்த பெரும் துரோகமாகவும் அமையும். தேர்தல் ஆணையம் சுதந்திரமாக செயல்படவில்லை என்பதோடு சட்ட நடைமுறைகளுக்கு புறம்பாகவும் ஜனநாயக உணர்வுகளுக்கு எதிராகவும் செயல்படுகிறது. இச்செயல் இளைஞர்கள் மத்தியில் சினத்தை ஏற்படுத்தும். இந்த தோல்விக்கு பிரதமர் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் தலைமையிலான அரசாங்கம் முழுபொறுப்பேற்க வேண்டும் என அந்த அறிக்கை தெரிவித்தது. 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கும் திட்டத்தை ஏற்கனவே முடிவு செய்தபடி இவ்வாண்டு ஜூலை மாதம் 1 தேதிக்குள் அமல்படுத்தாதத வரை 15வது பொதுத்தேர்தல் நடத்தப்படக்கூடாது என்பதில் தாங்கள் உறுதியாக உள்ளதாகவும் அந்த பக்கத்தான் ஹராப்பான் தலைவர் மன்றம் கூறியது.

# பி.கே.பி. அமலாக்கம் - பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு
## உடனடி உதவி வழங்குவீர்- அன்வார் வேண்டுகோள்

ஷா ஆலம் – கிஸ் ஐ.டி. எனப்படும் தனித்து வாழும் தாய்மார்களுக்கான விவேக சிலாங்கூர் பரிவுமிக்க தாய்மார் திட்டத்தில் மேலும் ஐயாயிம் பேருக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

கோவிட்-19 நோய்த் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு உதவும் வகையில் கிஸ் திட்டத்தில் உதவி பெறுவோர் எண்ணிக்கை உயர்த்தப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இத்திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் வழங்கப்படும் 2,400 வெள்ளி உதவித் தொகை சம்பந்தப்பட்டத் தரப்பினரின் பொருளாதார சுமையை ஓரளவு குறைக்கவும் குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கவும் இயலும் என்று அவர் சொன்னார்.

கோவிட்-19 நோய்த் தொற்றின் விளைவாக, பெண்களின் பொறுப்பில் இருக்கும் பி40 பிரிவைச் சேர்ந்த குடும்பங்களில் 64 விழுக்காடு அடிப்படை தேவைக்கு பொருள்களை வாங்க இயலாத அளவுக்கு ஏழ்மையில் உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனைக் கருத்தில் கொண்டு, கிஸ் ஐ.டி. திட்டத்தில் மேலும் ஐயாயிரம் பேரை இணைத்து அவர்களின் பொருளாதார சுமையைக் குறைக்கும் வகையில் ஆண்டுக்கு 2,400 வெள்ளி வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது என்றார் அவர்.

மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் குடும்பப் பெண்கள் மற்றும் இ-காசே திட்டத்தின் கீழ் ஏழைகள் அல்லது பரம ஏழைகளாக வகைப்படுத்தப்பட்டவர்களை இலக்காக க்கொண்டு இத்திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிஸ் ஐ.டி. திட்டத்திற்கான விண்ணப்ப பாரங்களை www.kiss.com.my என்ற அகப்பக்கம் வாயிலாக அல்லது அருகிலுள்ள சட்டமன்ற உறுப்பினர் சேவை மையங்களில் பெறலாம்.

# சுபாங் ஜெயா தொகுதியில் வெ.40,000 செலவில்
## இரு மேம்பாட்டுத் திட்டங்கள் அமல்



சுபாங் ஜெயா – கடந்தாண்டு அக்டோபர் மாதம் முற்றுப்பெற்ற இரு அடிப்படை வசதித் திட்டங்கள் சுபாங் ஜெயா தொகுதி மக்களுக்கு பெரும் மனநிறைவைத் தந்துள்ளன.

யுஎஸ்ஜே 3சி வீடமைப்புப் பகுதியில் 19,990 வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்பட்ட வேலிகள் அப்பகுதியில் குற்றச்செயல்களின் எண்ணிக்கையை குறைப்பதில் பெரிதும் துணை புரிந்துள்ளதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மிஷலி இ மேய் ஸீ கூறினார்.

வீடமைப்புப் பகுதியையும் நகர்ப்புற வனப் பூங்காவையும் பிரிக்கும் வேலிக்கு பதிலாக புதிய வேலியை அமைப்பதை இத்திட்டம் பிரதான நோக்கமாக கொண்டிருந்ததாக அவர் சொன்னார். பொறுப்பற்ற நபர்களின் அத்துமீறல் காரணமாக அந்த வேலி சேதமடைந்ததோடு குற்றச்செயல்கள் அதிகம் நிகழ்வதற்கும் வாய்ப்பாக அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

ஜாலான் எஸ்.எஸ்.15-2இ பகுதியில் உள்ள திடலைச் சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணி 19,993 வெள்ளி செலவில் மேற்கொள்ளப்பட்டாகவும் அவர் குறிப்பிட்டார்.

# செந்தோசா தொகுதி முயற்சியில்
## 60 மகளிர் தொழில் முனைவோர் உருவாக்கம்



கிள்ளான் – செந்தோசா சட்டமன்ற தொகுதி ஏற்பாட்டில் ஈராண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட “வாவ்” எனப்படும் அற்புத மகளிர் திட்டத்தில் பங்கேற்ற 200 மகளிரில் 60 பேர் தொழில்முனைவோர்களாக உருவாகியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலோர் கேட்டரிங், பாரம்பரிய உணவு, பேக்கரி, வாசனை திரவியம் போன்ற பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

அவர்கள் தங்கள் உற்பத்தி பொருள்களை காரில் வைத்து விற்பதற்கு ஏதுவாக பொருத்தமான இடங்களை தாங்கள் ஏற்படுத்தி தருவதாக அவர் சொன்னார்.

கோவிட்-19 பெருந் தொற்று பரவல் காலத்தில் குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்வதில் இந்த வர்த்தக நடவடிக்கைகள் அவர்களுக்கு பெரிதும் துணை புரிவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக கணவர்களுக்கு உதவும் நோக்கில் மகளிர் கடுமையாக உழைக்க தயாராக உள்ளனர். அவர்கள் மாதம் 3,000 வெள்ளி வரை வருமானம் ஈட்டுகின்றனர் என்றார் அவர்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு செந்தோசா தொகுதி “வாவ்” அமைப்பின் ஏற்பாட்டில் இங்குள்ள எக்சகியூட்டிவ் கிளப்பில் நடைபெற்ற விருந்து நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வாவ் அமைப்பில் மேலும் அதிகமான உறுப்பினர்களை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதேவேளையில் ஆண்டுக்கு குறைந்தது 100 மகளிர் தொழில்முனைவோரை உருவாக்கவும் இலக்கு வகுத்துள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

# சிப்பாங்கில் புயலால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு தலா 500 வெள்ளி நிதியுதவி



சிப்பாங் — இங்குள்ள பண்டார் பாரு சாலாக் திங்கியில் நேற்று ஏற்பட்ட கடும் புயலால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு தொடக்க உதவித் தொகையாக தலா 500 வெள்ளியை சிலாங்கூர் மாநில அரசு வழங்கியது.

பாதிக்கப்பட்டவர்கள் எதிர்நோக்கும் நிதிச் சுமையை குறைப்பதற்கும் அவர்களின் நலனைக் காப்பதற்கும் இந்த உடனடி நிவாரண நிதி வழங்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண நிதியாக 500 வெள்ளியை வழங்கியுள்ளோம். இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் அவர்களுக்கு இந்த நிதி ஓரளவு உதவியாக இருக்கும் என நம்புகிறோம் என்றார் அவர்.

எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான அளவில் உதவிகள் வழங்குவது தொடர்பில் நாளை அல்லது புதன் கிழமை நடைபெறவிருக்கும் சிலாங்கூர் மாநில பொருளாதார நடவடிக்கை மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று அவர் மேலும் சொன்னார். புயலால் பாதிக்கப்பட்ட சிப்பாங் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மேற்கொண்ட வருகையின் போது செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த பேரிடரில் பாதிக்கப்பட்ட பள்ளிகளுக்கு பொருத்தமான உதவிகளை வழங்குவது தொடர்பில் தாங்கள் விவாதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்மையில் ஏற்பட்ட கடும் புயலுடன் கூடிய மழையில் சாலாக் திங்கி வட்டாரத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட வீடுகள் கடுமையாகச் சேதமுற்றன.

# செம்பாக்கா அடுக்குமாடி குடியிருப்பு சீரமைப்புப் பணிகளுக்கு 600,000 வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் — பத்து கேவ்ஸ், செம்பாக்கா அடுக்குமாடி குடியிருப்பில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஆறு லட்சம் வெள்ளியை சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள மின் தூக்கி மற்றும் கூரைகளை பழுதுபார்ப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று செலாயாங் நகராண்மைக்கழக உறுப்பினர் அமிர் பாஸ்லி காலிட் கூறினார்.

மின் தூக்கியில் ஏற்பட்ட பழுது காரணமாக கடந்தாண்டு இறுதியிலிருந்து இந்த குடியிருப்பைச் சேர்ந்த சுமார் 2,000 குடியிருப்பாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்ததாக அவர் தெரிவித்தார்.

மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த ஜனவரி மாதம் 26ஆம் தேதி இந்த குடியிருப்பு பகுதிக்கு வருகை புரிந்து நிலைமையை நேரில் கண்டறிந்தப் பின்னர் இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

சுமார் பதினைந்து ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள மின் தூக்கி அடிக்கடி பழுதாகி வந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இரு மின் தூக்கிகளை மாற்றுவது தவிர்த்து அந்த அடுக்குமாடி குடியிருப்பின் கூரைகளும் பழுதுபார்க்க வேண்டியுள்ளது. இப்பணிகள் யாவும் இன்னும் இரு வாரங்களில் ஆரம்பமாகும் என்றார் அவர்.

# யுகே பெர்டானாவில் மேம்பாலம் கட்ட நிதி ஒதுக்கீடு



அம்பாங் — இங்குள்ள யுகே பெர்டானாவில் வர்த்தக மையத்தையும் யுகே பெர்டானா பள்ளிவாசலையும் இணைக்கும் வகையில் மேம்பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யத் தாம் தயாராக உள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இத்திட்ட அமலாக்கம் தொடர்பில் சம்பந்தப்பட்ட மேம்பாட்டு நிறுவனத்துடன் விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று அவர் சொன்னார். இந்த மேம்பாலம் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த முப்பதாயிரம் பேர் பயன்பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார். விரைவில் தீர்க்க வேண்டிய பிரச்னைகளை கண்டறிவற்காக நாங்கள் புக்கிட் அந்தாராபங்சா சட்டமன்றத் தொகுதிக்கு வருகை புரிந்தோம். குறிப்பாக, யுகே பெர்டானா பள்ளிவாசலில் மேம்பாலம் நிர்மாணிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கண்டறிந்தோம். ஆகவே, இத்திட்டத்திற்கு தேவையான நிதியை விரைவில் ஒதுக்கீடு செய்யவுள்ளோம் என்றார் அவர். சிலாங்கூருக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக நேற்று அம்பாங் நாடாளுமன்றத் தொகுதிக்கு வருகை புரிந்த மந்திரி புசார் புகே பெர்டானா பள்ளிவாசல் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் நேரில் கண்டறிந்தார். இந்த மேம்பாலம் கட்டப்படுவதன் மூலம் பள்ளிவாசலுக்குச் செல்ல விரும்புவோர் கிழக்கு கிள்ளான் பள்ளத்தாக்கு நெடுஞ்சாலை வழியாகச் நீண்ட தொலைவு சென்று மீண்டும் ‘யு‘ திருப்பத்தில் திரும்பி வரவேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, மாநில அரசினால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் கல்வியமைச்சு விரைவில் பள்ளியைக் கட்டும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அமிருடின் குறிப்பிட்டார். யுகே பெர்டானா மற்றும் புக்கிட் அந்தாராபங்சாவுக்கு இடையில் உள்ள அந்த நிலத்தில் பள்ளி நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் இருபதாயிரம் குடும்பங்கள் பயன்பெறும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

# கோல சிலாங்கூரில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி



கோல சிலாங்கூர் – இங்குள்ள தாமான் கமாசான் மற்றும் கம்போங் குவாந்தான் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட கடும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோல சிலாங்கூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் உடனடி நிவாரணமாக நிதியுதவி வழங்கினார்.

பாதிக்கப்பட்டவர்கள் அடுத்தக் கட்ட உதவியைப் பெறுவதற்கு ஏதுவாக இவ்விவகாரம் சமூக நல இலாகாவின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளதாக தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் ஜூல்கிப்ளி அகமது அறிக்கை ஒன்றில் கூறினார். நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் ஏற்பட்ட அந்த பேரிடரில் அவ்விரு பகுதிகளிலும் உள்ள ஏழு வீடுகள் பாதிக்கப்பட்டதாக கூறிய அவர், அதிர்ஷ்டவசமாக இச்சம்பவத்தில் யாருக்கும் உயிருடற்சேதமோ காயமோ ஏற்படவில்லை என்றார்.

கடுமையான புயல்காற்றில் வீடுகளின் கூரைகள் பறந்ததால் வீடுகளில் மழை நீர் புகுந்து தளவாடப் பொருள்கள் மற்றும் மின்சார பொருள்கள் சோதமடைந்தன என்றார் அவர்.

கடந்த 6ஆம் தேதி இதேபோன்ற பேரிடர் சம்பவம் பண்டார் பாரு சாலாக் திங்கி பகுதியில் நிகழ்ந்தது. அங்கு ஏற்பட்ட கடும் மழையுடன் கூடிய புயல்காற்றில் 100 வீடுகளும் இரு பள்ளிகளும் சேதமடைந்தன.

## மாநில பொருளாளராக டத்தோ ஹாரிஸ் நியமனம்



ஷா ஆலம் — ஷா ஆலம் டத்தோ பண்டார் டத்தோ ஹாரிஸ் காசிம் சிலாங்கூர் மாநில நிதி அதிகாரிகயாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை சிலாங்கூர் மாநில அரசு செயலாளர் அலுவலகம் தனது முகநூல் வாயிலாக உறுதிப்படுத்தியது. 'சிலாங்கூர் மாநில நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள டத்தோ ஹாரிஸ் காசிமுக்கு மாநில அரசு நிர்வாகம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்று அந்த முகநூலில் கூறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 3ஆம் தேதி மாநில அரசு செயலாளராக நியமனம் பெற்ற டத்தோ நோர் அஸ்மி டிரோனின் இடத்தை டத்தோ ஹாரிஸ் நிரப்புகிறார்.

சிலாங்கூர் மாநில இஸ்லாமிய சமய அதிகாரி மற்றும் உலு லங்காட் மாவட்ட அதிகாரி ஆகிய பதவிகளை டத்தோ ஹாரிஸ் காசிம் முன்பு வகித்துள்ளார்.

## நம்பிக்கையுடன் தடுப்பூசியைப் பெறுங்கள் சிலாங்கூர் சுல்தான் வேண்டுகோள்



ஷா ஆலம் – பொது மக்கள் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் மிகுந்த நம்பிக்கையுடன் கோவிட்-19 தடுப்பூசியைப் பெறுக் கொள்ள வேண்டும் என்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார். தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிலாங்கூர் அரசின் கோரிக்கையை ஏற்று பொதுமக்கள் செலங்கா அல்லது மைசெஜாத்ரா செயலி வாயிலாக தங்கள் பெயரை பதிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேன்மை தங்கிய சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷாவின் இந்த வேண்டுகோளை சிலாங்கூர் அரச அலுவலகம் முகநூல் வாயிலாக வெளியிட்டது புனித ரமலான் மாதத்தில் நோன்பிருக்கும் போதும் கூட இந்த தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதால் இது குறித்து யாரும் அச்சமடையத் தேவையில்லை என பள்ளிவாசல்களில் நடைபெற்ற வெள்ளிக்கிழமை சமய உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்தை தாம் வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டார். கோவிட்-19 உள்பட எத்தகைய அச்சுறுத்தல்களிலிருந்தும் பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதற்கு தாம் இறைவனை பிரார்த்திப்பதாகவும் அவர் சொன்னார். இந்தப் பிரச்னை ஆக்ககரமான முறையில் துடைத்தொழிக்கப்படும் என்பதோடு விரைவிலும் முடிவுக்கு வரும். இருளுக்குப் பின்னர் நிச்சயம் ஒளி தோன்றும். அந்த ஒளி நமது வாழ்வை பிரகாசமாக்கும் என அவர் மேலும் கூறினார்.

## சிறு-நடுத்தர தொழில்முனைவோருக்கு உதவ வெ.50 லட்சம் ஒதுக்கீடு



ஷா ஆலம் – சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் தங்கள் வர்த்தகத்தை இலக்கவியலுக்கு மாற்றுவதற்கு ஏதுவாக சிலாங்கூர் மாநில அரசு இலக்கவியல் இணைய உதவித் தொகையாக 50 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக 1,000 தொழில்முனைவோர் பயன் பெறுவர் என்று சிடேக் எனப்படும் சிலாங்கூர் மாநில தகவல் தொழில்நுட்ப மற்றும் இலக்கவியல் பொருளாதார கழகம் கூறியது.

இத்திட்டத்தின் கீழ், மின் வர்த்தகம், மனித வளம், சம்பள முறை, கணக்கியல், இலக்கவியல் விற்பனை சந்தை போன்ற இணைய முறைகளில் சந்தாதாரர் ஆக விரும்புவோருக்கு அதிகப்பட்சம் 5,000 வெள்ளி அல்லது முதலீடுத் தொகையில் 50 விழுக்காட்டிற்கு இணையான தொகையை மாநில அரசு வழங்கும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு இலக்கவியல் தொடர்பான சேவைகைளை வழங்கும் நிறுவனங்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

இத்திட்டத்தின் கீழ் இணைந்து பணியாற்றுவதற்கு அத்துறையினர் விண்ணப்பம் செய்யலாம் என அக்கழகம் தெரிவித்தது.

இணைய சேவையை வழங்கும் நிறுவனங்கள் குறைந்த பட்சம் 51 விழுக்காடு மலேசியர்களின் பங்குரிமையைக் கொண்டதாகவும் சிலாங்கூரை தளமாக கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களைச் செய்வதற்கான இறுதி நாள் ஏப்ரல் 15ஆம் தேதி ஆகும்.

## தடுப்பூசித் திட்டத்தில் 90 விழுக்கட்டு முன்களப் பணியாளர்கள் பங்கேற்பு - சுல்தான் மகிழ்ச்சி



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்திலுள்ள அரசாங்க மருத்துவமனைகளைச் சேர்ந்த 90 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட முன்களப் பணியளர்கள் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளது குறித்து மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். மருத்துவர்கள், தாதியர், அம்புலன்ஸ் ஓட்டுநர்கள், மருத்துவ துறை சார்ந்த பணியாளர்கள் ஆகியோர் இந்த தடுப்பூசியைப் பெற்றுள்ளதாக சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அறிக்கை ஒன்றில் கூறினார்.


தனியார் மருத்துவமனைகளில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இந்த தடுப்பூசியை பெற்றுள்ளதாக அறிகிறேன். இந்த செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. முன்களப்பணியாளர்கள் இனி மன அழுத்தமின்றி நிதானமாகவும் பாதுகாப்பாகவும் தங்கள் பணியை ஆற்றுவர் என நம்புகிறேன் என்றார் அவர்.

கோவிட்-19 நிலவரங்கள் குறித்து மாநில சுகாதார இயக்குநர் டத்தோ இண்ட்ரா டாக்டர் சஹாரி நகாடிமானிடமிருந்து தாம் தொடர்ந்து தகவல்களைப் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தங்கள் பொறுப்புகளை பொறுப்புடன் நிறைவேற்றி வரும் சிலாங்கூர் மாநிலத்திலுள்ள மருத்துவமனைகளைச் சேர்ந்த முன்களப் பணியாளர்களை தாம் பெரிதும் பாராட்டுவதாகவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஷா ஆலமில் ‘இசை நீரூற்று’

## சுற்றுப்பயணிகளை ஈரக்கும் புதிய மையம்



ஷா ஆலம் – இங்குள்ள தாசேக் ஷா ஆலமில் 40 மீட்டர் உயரத்திற்கு எழக்கூடிய ‘இசை நீரூற்று‘ உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்களுக்கு திறக்கப்பட்ட இந்த நீரூற்று மாநகரின் புதிய சுற்றுலா மையமாக உருவெடுத்துள்ளது. இசைக்கேற்ப நீரூற்று அசைந்தாடும் வகையில் ஒலி மற்றும் ஒளியமைப்பு (எல்.இ.டி) வசதிகள் இந்த நீரூற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஷா ஆலம் இடைக்கால டத்தோ பண்டார் முகமது ரஷிடி ருஸ்லான் கூறினார். இந்த இசை நீரூற்று வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை தினங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்படும் என்று அவர் சொன்னார். இசை நீரூற்று மற்றும் தொங்கு பாதையின் திறப்பு விழாவில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். சிலாங்கூர் மாநில ராஜா மூடா துங்கு அமிர் ஷா இந்த சுற்றுலா ஈர்ப்பு மையங்களை திறந்து வைத்தார். மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாயும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். சுமார் 19 லட்சத்து 60 ஆயிரம் வெள்ளி செலவில் இந்த இசை நீரூற்று உருவாக்கப்பட்டதாக முகமது ரஷிடி கூறினார். ஷா ஆலம் நகருக்கு சுற்றுப்பயணிகளை ஈர்க்கும் முயற்சியாக இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஹிஜ்ரா கடனுதவித் திட்டத்தின் வாயிலாக

## 57,211 தொழில்முனைவோர் உருவாக்கம்

ஷா ஆலம் – ஹிஜ்ரா சிலாங்கூர் கடனுதவித் திட்டம் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது முதல் இதுவரை 57,211 தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

‘மைக்ரோ கிரடிட்‘, ‘ஜீரோ டு ஹீரோ‘, ‘கோ டிஜிட்டல்‘, நியாகா டாருள் ஏசான்‘ (நாடி) ஆகிய கடனுதவித் திட்டங்கள் மூலம் அவர்கள் 55 கோடியே 45 லட்சத்து 40 ஆயிரத்து 500 வெள்ளி கடனாகப் பெற்றுள்ளதாக அவர் சொன்னார்.

வியாபாரம் தொடங்க ஆர்வம் இருந்தும் மூலதனம் இல்லாதவர்கள், கூடுதல் மூலதனம் தேவைப்படுவோர், கோவிட்-19 நோய்த் தாக்கம் காரணமாக வியாபாரத்தில் இழப்பை எதிர்நோக்கியர்கள் என பல்வேறு தரப்பினருக்கு இந்த ஹிஜ்ரா திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 பரவலுக்குப் பின்னர் பல வணிகர்கள் தொடர்ச்சியாக கடனுதவி பெற்ற காரணத்தால்




கடன் பெற்றவர்களின எண்ணிக்கை உயர்வு கண்டது என்றார் அவர்.

சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் 10 கோடி வெள்ளியை சுழல் நிதியாக கொண்டு ஹிஜ்ரா மைக்ரோ கிரடிட் கடனுதவித் திட்டத்தை சிலாங்கூர் அரசு தொடக்கியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களை வழிநடத்துவதற்கு ஏதுவாக கடனுதவித் திட்ட பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிகளும் உதவிகளும் வழங்கும் வகையில் ஜீரோ டு ஹீரோ திட்டம் பின்னர் அமல்படுத்தப்பட்டது.

சிறு வியாபாரிகளுக்கு 1,000 வெள்ளி முதல் 5,000 வெள்ளி வரை கடனுதவி வழங்க வகை செய்யும் நாடி திட்டத்தை மாநில அரசு கடந்த பிப்ரவரி மாதம் தொடக்கியது. வியாபார நடவடிக்கைகளை இலக்கவியலுக்கு மாற்றுவதற்கு உதவும் வகையில் கோ டிஜிட்டல் திட்டம் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டது.

# கோவிட்-19 தடுப்பூசி விழிப்புணர்வு இயக்கத்தில்

## 288 ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தீவிர பங்கேற்பு



சிகிஞ்சான்— கோவிட்-19 தடுப்பூசியின் அவசியத்தை பொதுமக்களிடையே உணர்த்தும் பணியில் மாநிலத்திலுள்ள 12 ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்த 288 ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் மக்கள் அதிகம் கூடும் இடங்களான பாசார் பாகி மற்றும் பாலார் மாலாம் பகுதிகளுக்குச் சென்று தடுப்பூசியைப் பெறுவதற்கு பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை பொதுமக்களிடம் வலியுறுத்துவர் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தவிர்த்து கிராம சமூக நிர்வாக மன்ற உறுப்பினர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை ஊக்கமூட்டும் வகையிலான ஆதரவு இவர்களிடமிருந்து கிடைத்துள்ளது என்று அவர் சொன்னார்.

தடுப்பூசித் திட்டத்தில் பதிவு செய்யத் தெரியாதவர்களுக்கு குறிப்பாக மூத்த குடிமக்களுக்கு உதவும் வகையில் மைசெஜாத்ரா செயலி அல்லது அகப்பக்கம் அல்லது தொலைபேசி வாயிலாக இந்த பதிவு செய்வதற்கு இந்த ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் உதவி புரிவர் என்றார் அவர்.

நேற்று இங்கு நடைபெற்ற வட்டார குடியிருப்பாளர்களுக்கு நிலப்பட்டா வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக இந்த தடுப்பூசி இயக்கத்தில் பொதுமக்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.




# நீர்க் கட்டணத்தைக் குறைக்க தனி மீட்டரை பொருத்துவீர்- அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு வேண்டுகோள்

பெட்டாலிங் ஜெயா – நீர்க்கட்டணத்தை குறைப்பதற்கு ஏதுவாக கூட்டு மீட்டருக்குப் பதிலாக தனி மீட்டரைப் பொறுத்திக் கொள்ளும்படி அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நீர் கட்டணங்கள் தாமதமாக செலுத்தப்படும் காரணத்தால் நீர் விநியோகம் துண்டிக்கப்படுவதற்கான சாத்தியங்களை இதன் மூலம் தவிர்க்க முடியும் என்று புக்கிட் காசிங் சட்டமன்ற உறுப்பினர் ஆர். ராஜீவ் கூறினார். அடுக்குமாடி குடியிருப்புகளில் கூட்டு நீர்க்கட்டண மீட்டரை குடியிருப்பு கூட்டு நிர்வாக அமைப்பு நிர்வகித்து வருகிறது. இதனால் நீர்க் கட்டணம் அதிகமாக உள்ளதோடு தாமதமாக செலுத்தப்படும் காரணத்தால் விநியோகமும் துண்டிக்கப்படும் அபாயமும் உள்ளது என்று அவர் சொன்னார். இங்குள்ள டாமன்சாரா பிஸ்தாரியில் உள்ள குடியிருப்புகளுக்கு தனி மீட்டர்களைப் பொறுத்தும் பணியை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த குடியிருப்பில் உள்ள 421 குடியிருப்பாளர்கள் நீர் விநியோகத்தை கூட்டு மீட்டரிலிருந்து தனி மீட்டருக்கு மாற்றி விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனிடையே, தனது தொகுதியிலுள்ள டாமன்சாரா பிஸ்தாரி, பங்சாபுரி பி.கே.என்.எஸ். செக்சன் 17, மற்றும் காசிங் இண்டா அடுக்குமாடி குடியிருப்பு ஆகிய மூன்று குடியிருப்புகளும் இத்திட்டத்திற்கு மாறிவிட்டதாக அவர் சொன்னார். கூட்டு மீட்டர் திட்டத்தின் கீழ் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் இருக்கும் அனைத்து வீடுகளுக்குமான நீர் பயனீட்டை கூட்டு மீட்டர் பதிவு செய்யும். பிறகு ஒவ்வொரு குடியிருப்பாளரும் பயன்படுத்திய நீரின் அளவை மதிப்பீடு செய்யும் பணியை கூட்டு நிர்வாக மன்றம் மேற்கொள்ளும்.

# நிதி நிர்வாக வழிகாட்டி புத்தகம் இளைஞர்களுக்கு விநியோகம்




ஷா ஆலம் – இளைஞர்கள் நிதியை முறையாக நிர்வகிப்பதற்கு வழிகாட்டும் நிதி நிர்வாக வழிகாட்டி புத்தகத்தை சிலாங்கூர் மாநில அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டிப் புத்தகம் மாநில சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று பயனீட்டாளர் விவகாரங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது ஜவாவி அகமது முக்னி கூறினார். மாநிலத்திலுள்ள பெரும்பாலான இளைஞர்கள் நல்ல வருமானத்தை ஈட்டுகின்றனர். அந்த வருமானத்தை தவறான வழிகளில் செலவிட்டு திவாலாவது உள்ளிட்ட பிரச்னைகளில் அவர்கள் சிக்குவதை தடுப்பதற்காக இந்த நிதி நிர்வாக வழிகாட்டி புத்தகத்தை அரசு வெளியிடுகிறது என்றார் அவர். தேவையின் அடிப்படையில் செலவுகளை செய்வதற்கான வழிகாட்டுதலை இந்த புத்தகம் வழங்கும். இதன் மூலம் நிதியை முறையாக நிர்வகிப்பதன் அவசியத்தை பொதுமக்கள் உணர முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் இந்த வழிகாட்டி புத்தகத்தை வெளியீடு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். முதல் கட்டமாக மாநிலம் முழுவதும் சுமார் பத்தாயிரம் புத்தகங்களை விநியோகிக்க தாங்கள் திட்டமிட்டுள்ளதாக கூறிய அவர், இப்புத்தகத்தின் மூலம் அளப்பரிய பயனை பொதுமக்கள் பெறுவர் என நம்பிக்கைத் தெரிவித்தார். கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக புத்தகத்தை அச்சிடுவதில் சிக்கல் ஏற்பட்டதால் தொடக்கமாக பத்தாயிரம் புத்தகங்களை மட்டும் வெளியிட்டுள்ளோம். அடுத்தக் கட்டமாக மாநிலம் முழுமைக்கும் இப்புத்தகத்தை விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளோம் என்றார் அவர்.

# ஷா ஆலம் இடைக்கால டத்தோ பண்டாராக துணை டத்தோ பண்டார் நியமனம்



ஷா ஆலம் – ஷா ஆலம் மாநகரின் இடைக்கால டத்தோ பண்டாராக துணை டத்தோ பண்டார் முகமது ரஷிடி ருஸ்லான் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இந்த நியமனம் வரும் திங்கள் கிழமை முதல் அமலுக்கு வருகிறது. இங்குள்ள விஸ்மா எம்.பி.எஸ்.ஏ.வில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் டத்தோ பண்டார் ஹரிஸ் காசிமிடமிருந்து முகமது ரஷிடி இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஹரிஸ் காசிம் மாநில நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஷா ஆலம் மாநகர் மன்ற டத்தோ பண்டார் பதவி காலியானது. ஷா ஆலம் மாநகரை கார்பன் மாசுபாடு குறைந்த நகரமாக உருவாக்கும் தனது இலக்கு வரும் 2035ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றப்படும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார். இந்நோக்கத்திற்காக அனைத்துலக நிலையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு தேசிய அளவிலும் பல விருதுகள் பெறப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். கடந்த பத்தாண்டுகளாக ஷா ஆலம் மாநகரில் தாம் பணியாற்றியதாக கூறிய அவர், மாநகர் மன்ற ஊழியர்கள் வழங்கிய அபரிமித ஒத்துழைப்பு காரணமாக தமது பணியை எளிதாக மேற்கொள்ள முடிந்ததாக சொன்னார்.

# சிலாங்கூரில் 200க்கும் மேற்பட்ட சட்டவிரோத பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் மூடப்பட்டன

ஷா ஆலம் – கடந்த 2019ஆம் ஆண்டு அக்டோபர் முதல் கடந்த டிசம்பர் மாதம் வரை சிலாங்கூரில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சாலைகளை சட்டப்பூர்வமாக்கும் நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் செயல்பட்ட 200க்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. பதனீட்டு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளிலிருந்து பிளாஸ்டிக் பொருள்களை நாட்டிற்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளை சிலாங்கூர் ஒரு போதும் அனுமதிக்காது என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். ஆயினும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 100 தொழிற்சாலைகளுக்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளதாக கூறிய அவர், எனினும், அவை சிறிய அளவில் மட்டுமே செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார். உள்நாட்டு பயனீட்டுக்கு அப்பொருள்கள் தேவைப்படுவதால் அனைத்து பிளாஸ்டிக் மறுசூழற்சி தொழிற்சாலைகளையும் மூடிவிட முடியாது. ஆகவே, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாமல் உள்நாட்டு பிளாஸ்டிக் பொருள்களை மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளோம் என்றார் அவர். அத்தொழிற்சாலைகள் அனைத்து சுற்றுச்சூழல் துறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இங்குள்ள சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா கட்டிடத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார். குறைவான எண்ணிக்கையிலான நிறுவனங்களுக்கு பிளாஸ்டிக் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஏ.பி. (APs) எனப்படும் இறக்குமதி அங்கீகார உள்ள நிறுவனங்கள் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்றார் அவர்.

selangor kini apr 2021.indd 12 02-Apr-21 9:04:39 PM

## மக்கள் பிரதிநிதிகள் கட்சியிலிருந்து வெளியேறுவதற்கு மிரட்டலே காரணம்- கெஅடிலான் குற்றச்சாட்டு



ஷா ஆலம் – நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கு பெரிக்கத்தான் நேஷனல் அரசாங்கம் நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டத்தை கொண்டிருப்பதாக கெஅடிலான் ராக்யாட் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. அரச மலேசிய போலீஸ் படை, உள்நாட்டு வருமான வரி வாரியம் மற்றும் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் ஆகிய அமைப்புகளை பெரிக்கத்தான் அரசாங்கம் தவறாக பயன்படுத்துவதை இத்தகைய நடவடிக்கைகள் காட்டுவதாக கெஅடிலான் கட்சியின் பொதுச் செயலாளர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் நசாத்தியோன் இஸ்மாயில் கூறினார். தற்போது விசாரணையில் இருக்கும் ஒரு வழக்கு தொடர்பாக தனது அரசியல் செயலாளர், சிறப்பு உதவியாளர் மற்றும் தமக்கு அறிமுகமானவர்களை தடுத்து வைத்ததன் மூலம் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் தம்மைக் குறி வைத்துள்ளதாக டத்தோ சேவியர் ஜெயக்குமார் அண்மையில் கூறியிருந்தார். அதோடு மட்டுமின்றி, தம்மை தொடர்பு கொண்ட மூத்த அமைச்சர் ஒருவர் பெரிக்கத்தான் நேஷனல் அரசாங்கத்தை ஆதரிக்காவிட்டால் கடுமையான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் எச்சரித்ததாகவும் சேவியர் தெரிவித்துள்ளார் என்று அறிக்கை ஒன்றில் இஸ்மாயில் கூறினார். அவசர காலத்தை காரணம் காட்டி நாடாளுமன்றத்தை முடக்கி வைத்திருக்கும் தற்போதைய சிறுபான்மை அரசாங்கம் மேலும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு வெகுமதி, நெருக்குதல் மற்றும் மிரட்டல் போன்ற ஆயுதங்களை பயன்படுத்தி வருகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். கெஅடிலான் உறுப்பினர்கள் தாங்கள் கொண்ட கோட்பாடுகளில் உறுதியாகவும் ரிபோர்மாசி போராட்டத்திலிருந்து வழுவாமலும் ஆசை வார்த்தைகளுக்கும் மிரட்டல்களுக்கும் அடிபணியாமலும் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பிளாஸ்டிக் பை வழி கிடைத்த 64 லட்சம் விழிப்புணர்வு பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்படும்

ஷா ஆலம் – பிளாஸ்டிக் எனப்படும் நெகிழிப்பைகளுக்கு வர்த்தக மையங்களில் விதிக்கப்படும் 20 காசு கட்டணம் மூலம் வசூலான 64 லட்சம் வெள்ளி விழிப்புணர்வு இயக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும். இத்தகைய விழிப்புணர்வு இயக்கங்களை வெற்றியடையச் செய்வதில் பெரும் பங்காற்றும் தரப்பினரை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இத்தொகை பயன்படுத்தப்படும் என்று சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார். இத்திட்டத்தை மாநில அரசு அமல்படுத்திய ஓராண்டு காலத்தில் வசூலான தொகை இதுவாகும் என்று அவர் சொன்னார். இந்த தொகையின் அளவு அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது. நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக மக்கள் அதிகம் வெளியில் செல்லவில்லை. ஆனாலும் பிளாஸ்டிக் பைகளின் பயனீடு அதிகமாகவே உள்ளது என்றார் அவர். இது ஆரோக்கியமற்ற சூழலின் அறிகுறி எனக்கூறிய அவர், பிளாஸ்டிக் பைகளின் பயனீட்டைக் கட்டுப்படுத்தும் முயற்சியை சவால்மிக்கதாகவும் ஆக்கியுள்ளது என்று சொன்னார். இருந்த போதிலும் மாநில மக்களிடையே பிளாஸ்டிக் பைகளின் பயனீட்டுக்கு எதிரான விழிப்புணர்வு அதிகமாகவே உள்ளதை மெர்டேக்கா சென்டர் மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுவதாக அவர் குறிப்பிட்டார். அந்த ஆய்வில் கலந்து கொண்டவர்களில் 85 விழுக்காட்டினர் அன்றாட வாழ்க்கையில் தாங்கள் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை வெகுவாக குறைத்துள்ளதாக கூறியுள்ளதை அவர் உதாரணம் காட்டினார்.

## தலைவர்களைக் கொல்லும் முயற்சி முறியடிப்பு காவல் துறைக்கு பக்கத்தான் பாராட்டு

ஷா ஆலம் – அரசாங்கத் தலைவர்களை படுகொலை செய்வதற்கு கடந்த 2020 ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை வெற்றிகரமாக தடுத்து நிறுத்திய காவல் துறைக்கு பக்கத்தான் ஹராப்பான் (நம்பிக்கை கூட்டணி) தலைவர் மன்றம் பாராட்டு தெரிவித்துள்ளது. அப்போது பிரதமராக இருந்த துன் டாக்டர் மகாதீர் முகமது, அமைச்சர்களான லிம் குவான் எங், டத்தோஸ்ரீ டாக்டர் முஜாஹிட் யூசுப் மற்றும் சட்டத்துறைத் தலைவர் டான்ஸ்ரீ தோமி தோமஸ் ஆகியோரை படுகொலை செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டத் தகவல் தங்கள் கவனத்திற்கு வந்துள்ளதாக அம்மன்றம் கூறியது. அப்போது உள்துறை அமைச்சராக இருந்த டான்ஸ்ரீ மொகிடின் யாசினிடம் இந்த கொலை முயற்சி தொடர்பான தகவலை போலீசார் தெரிவித்தனரா



என்று அந்த அறிக்கையில் விளக்கப்படவில்லை. எனினும், அச்சம்பவம் தொடர்பான விசாரணை குறித்து தற்போது பிரதமராக இருக்கும் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் விளக்க வேண்டும் என்று பக்கத்தான் கூட்டணி வலியுறுத்தியுள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் பிரதமர் உடனடியாக விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று நேற்றிரவு வெளியிட்ட கூட்டறிக்கையில் அம்மன்றம் வலியுறுத்தியது. கெஅடிலான் கட்சியின் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், அமானா கட்சியின் தலைவர் முகமது சாபு ஜசெகவின் தலைமைச் செயலாளர் லிம் குவான் எங் ஆகியோர் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். அரசாங்கத் தலைவர்களைக் கொலை செய்வதற்கு திட்டம் தீட்டிய ஆடவரை தாங்கள் கைது செய்துள்ளதாக புக்கிட் அமான் பயங்கரவாத தடுப்பு (இ8) சிறப்பு பிரிவின் துணை இயக்குநர் அஸ்மான் ஓமாரை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

## நாடாளுமன்றம் முடக்கம்- அரசாங்கத்தின் காரணம் அறிவுக்கு பொருந்தவில்லை

கோம்பாக் – அவசரகாலப் பிரகடனம் காரணமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறும் காரணம் அறிவுக்கு பொருந்தும் வகையில் அமையவில்லை என கெஅடிலான் கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். நாட்டில் அவசரகாலத்தின் போது பல்வேறு துறைகள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள வேளையில் நாடாளுமன்றத்திற்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளதை சிறிதும் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை என்று அவர் சொன்னார். கல்வி, பொருளாதாரம், விளையாட்டு உள்பட பல்வேறு துறைகள் செயல்படுவதற்கு அனுமதியளித்துள்ள பெரிக்கத்தான் நேஷனல் அரசாங்கம் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் மட்டும் ஏன் எதிர்மறையான போக்கை கடைபிடிக்கிறது என்று அவர் கேள்வியெழுப்பினார். பெரிக்கத்தான் அரசாங்கத்தின் ஆட்சியில் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதே சமயம் நாடாளுமன்றம் கூட்டப்படுவதை தடுக்க அவசரகாலம் ஒரு கேடயமாக பயன்படுத்தப்படுகிறது என்றார் அவர். இங்குள்ள பத்து கேவ்சில் நடைபெற்ற கெஅடிலான் இன்னும் பொருத்தமான கட்சியே எனும் தலைப்பிலான தலைவர் பேருரை நிகழ்வில் உரையாற்றிய போது எதிர்க்கட்சித் தலைவருமான அவர் இதனைத் தெரிவித்தார். பதினெட்டு வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை குறித்து பேசிய அவர், வாக்களிப்பதற்கான வயது வரம்பை 21 வயதிலிருந்து 18 வயதாக குறைக்கும் தீர்மானத்தை கட்சி வேறுபாடின்றி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதாக கூறினார். அந்த நடைமுறையின் அமலாக்கம் ஒத்தி வைக்கப்பட்டதற்கு பிரதமர் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் அரசாங்கத்தின் அச்ச உணர்வே காரணம் என்றும் அவர் சொன்னார். வாக்களிப்பதற்கான வயது வரம்பை குறைக்கும் தீர்மானத்திற்கு கெஅடிலான், ஜசெக, அமானா, அம்னோ, மசீச மற்றும் கட்சித் தாவிய கும்பல் உள்பட அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். ஆனால், இப்போது இளைஞர்களைக் கண்டு அவர்கள் பயப்படுகின்றனர் என்றார் அவர்.

selangor kini apr 2021.indd 13 02-Apr-21 9:04:39 PM

# சிலாங்கூரில் ரிபோர்மாசி இயக்கம் தொடரும் மந்திரி புசார் சூளுரை



ஷா ஆலம் – கெஅடிலான் கட்சியின் வலுவான கோட்டையாக சிலாங்கூர் மாநிலம் விளங்குவதால் இங்கு ரிமோர்மாசி இயக்கத்தின் கோட்பாடுகள் தொடரப்படும் என்று மந்திரி புசார் ஸ்ரீ அமிருடின் ஷாரி சூளுரைத்துள்ளார். தன்மானம் காக்கப்படுவதையும் நாட்டிலும் மாநிலத்திலும் மாறுதல்களைக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதையும் உணர்வாகக் கொண்டு இந்த கட்சி தோற்றுவிக்கப்பட்டுள்ளதை கட்சியின் கிளைகள், இளைஞர் மற்றும் மகளிர் அமைப்புகளின் உருவாக்கம் புலப்படுத்துகிறது என்று அவர் சொன்னார்.

டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறைகளால் 1998ஆம் ஆண்டில் நாம் உறக்கத்திலிருந்து விழித்தோம். வீறுகொண்டெழுந்து தெருவில் இறங்கி போராடினோம். போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தாக்கப்பட்டார்கள், நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார்கள், நெருக்குதலுக்கு ஆளானார்கள், வேலை இழந்தார்கள். ஆனாலும் இந்த பிரச்னை இன்னும் ஓயவில்லை. ஆகவேதான் ரிமோர்மாசி இயக்கம் இன்னும் தொடரப்பட வேண்டும் என விரும்புகிறோம். ரிபோர்மாசி இயக்கத்தில் நம்முடன் துணை நிற்பதற்கும் கெஅடிலான் கட்சியை வலுவாக கோட்டையாக உருவாக்குவதற்கும் நமது சகாக்கள் எப்போதும் துணை நிற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார் அவர்.

பத்து கேவ்ஸ், டேவான் ஸ்ரீ சியான்தானில் நேற்று நடைபெற்ற ரிமோர்மாசி மன்றத்தின் நிகழ்வில் உரையாற்றுகையில் சிலாங்கூர் மாநில தலைமைத்துவ மன்றத்தின் தலைவருமான அவர் குறிப்பிட்டார். அதிகாரம், பதவி மற்றும் அந்தஸ்து பற்றி கவலைப்படாமல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமே ரிமோர்மாசி இயக்கத்தின் உண்மையான இலக்காக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமராக, மூத்த மந்திரியாக, மந்திரியாக யார் வரவேண்டும் என்பதெல்லாம் நமக்கு ஒரு பொருட்டல்ல. மாறாக, அரசு நிர்வாகம், சட்டத்துறை, நீதித்துறை போன்றவற்றில் மாற்றங்கள் வர வேண்டும் என்பதுதான் நமது எதிர்பார்ப்பு என்றார் அவர்.

## ஆகஸ்டு மாதத்திற்குள் 50,000 பேருக்கு கோவிட்-19 பரிசோதனை- செல்கேர் நம்பிக்கை



அம்பாங் – இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தின் வாயிலாக வரும் ஆகஸ்டு மாதத்திற்குள் 50,000 பேருக்கு அச்சோதனையை மேற்கொள்ள முடியும் கிளினிக் செல்கேர் நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்த இலக்கை அடைவதற்காக அடுத்த ஆறு மாத காலத்திற்கு இந்த பரிசோதனை இயக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று கிளினிக் செல்கேர் நிர்வாகி முகமது நோர் முகமது நாசீர் கூறினார். சிலாங்கூர் மாநில அரசின் ஏற்பாட்டிலான இந்த இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கம் கடந்த பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பரிசோதனை இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு வட்டார தலைவர்கள் மற்றும் குடியிருப்பாளர் சங்கங்கள் மூலம் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது உள்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இது தவிர நடப்பிலுள்ள பிரசார வியூகங்களையும் மேம்படுத்தவுள்ளோம் என்றார் அவர். கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி இயக்கம் தொடங்கப்பட்டு விட்ட போதிலும் இலவச பரிசோதனை இயக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குறிப்பாக தடுப்பூசியை பெற்றவர்கள் குறைவாக உள்ள பகுதிகளை மையமாக கொண்டு இந்த பரிசோதனை இயக்கத்தை நடத்தவிருக்கிறோம் என்று அவர் மேலும் சொன்னார். கம்போங் பாண்டானில் உள்ள அம்பாங் ஜெயா நகராண்மைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி தொடங்கி இதுவரை சுமார் எட்டாயிரம் பேர் கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தில் பங்கு கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 10,000 வெள்ளி அபராதம் நியாயமற்றது



ஷா ஆலம் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை (எஸ்.ஓ.பி.) பின்பற்றாதவர்களுக்கு பத்தாயிரம் வெள்ளி அபராதம் விதிக்கும் அரசாங்கத்தின் முடிவு நியாயமற்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து பெரிக்காத்தான் நேஷனல் அரசாங்கம் சிறிதும் கவலைப்படாததை இந்நடவடிக்கை காட்டுகிறது என்று அவர் சொன்னார். பொதுமக்களில் பலர் தற்செயலாகவோ குழப்ப நிலை காரணமாகவோ இத்தகைய தவறுகளைப் புரிவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். எஸ்.ஓ.பி. நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியதற்காக இதுவரை 330 பேருக்கு தலா பத்தாயிரம் வெள்ளி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய போலீஸ் படைத் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் ஹமிட் படோர் நேற்று கூறியிருந்தார். 'தண்டனை வழங்குவதில் பாகுபாடான அணுகுமுறை கடைபிடிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதை இது மறைமுகமாக உணர்த்துகிறது. எஸ்.ஓ.பி. விதிமுறைகளை பகிரங்கமாக மீறும் அரசியல்வாதிகள், உயரிய அந்தஸ்து கொண்டவர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் தண்டனை அல்லது அபராதமின்றி தப்பிவிடுவதை காண முடிகிறது என்று அன்வார் குறிப்பிட்டார். தற்போதைய சூழலில் பலர் வேலை இழந்து வருமானத்திற்கு வழியின்றி சிரமப் படுகின்றனர். அவர்களின் நிலையை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும் என்று போர்ட்டிக்சன் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார். ஆயிரம் வெள்ளி அபராதத்தைக்கூட செலுத்த முடியாமல் பலர் தவிக்கும் நிலையில் பத்தாயிரம் வெள்ளி அபராதத்தை எவ்வாறு செலுத்த முடியும் என்று அரசாங்கம் எப்போதாவது யோசித்ததுண்டா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

## குற்றச்செயலை குறைக்க அடுக்குமாடி குடியிருப்பில் சி.சி.டி.வி

# சிலாங்கூர் அரசு உதவி

கிள்ளான்: கண்காணிப்பு கேமராக்களை (சி.சி.டி.வி) நிறுவுவதற்கு சிலாங்கூர் அரசு ரிங்கிட் 3 லட்சம் செலவிட்டுள்ளது. வீடமைப்பு, நகர்புற நல்வாழ்வு மற்றும் தொழில் முனைவோர் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினராக ரோட்சியா இஸ்மாயில், பரிவுமிக்க அரசாங்கத்தின் (ஐபிஆர்) செரியா திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ரிங்கிட் 10.5 மில்லியன் நிதியின் ஒரு பகுதியாகும் இந்த ஒதுக்கீடு என்றார்.

“ஒவ்வொரு குறைந்த விலை அடுக்குமாடி குடியிருப்பிற்கும் நாங்கள் தலா ரிங்கிட்10,000 ஒதுக்கீடு செய்துள்ளோம். அவை தேவை மற்றும் நிலைமைக்கு ஏற்ப வழங்கப்படுதாக அவர் கூறினார். “வழக்கமாக, பிரதான நுழைவாயில் மற்றும் லிஃப்டில் 12 முதல் 16 சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களை நிறுவுவது இதில் அடங்கும்” என்று ரோட்சியா இஸ்மாயில் கூறினார். இன்று இங்குள்ள பண்டார் புத்ராவின் பங்சாபுரி ஸ்ரீ ஆயுவில் உள்ள லாமன் ஹிஜாவில் ”ஸ்ட்ராத்தா உரிமம்” வழங்கும் (சிலாங்கூரில் பிக் & பே) திட்டத்தை அதிகாரப்பூர்வமாக தொடங்கிய பின்னர் அவர் இவ்வாறு கூறினார். கடந்த ஆண்டு முதல் சம்பந்தப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளின் கூட்டு நிர்வாக அமைப்பு (ஜே.எம்.பி) மற்றும் நிர்வாகக் கழகம் (எம்.சி) ஆகியோரால் செய்யப்பட்ட கிரிமினல் வழக்கு புகாரின் விளைவாக இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக ரோட்சியா



இஸ்மாயில் கூறினார். “சி. சி.டி.வி நிறுவ தகுதியான குடியிருப்புகள் சட்ட விரோத மற்றும் குற்ற பதிவுகளின் தரவுகள் அடிப்படையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது

## வருமானமின்றி தவிக்கும் மக்கள்- வாரி இறைக்கும் வங்கிகள்

# அன்வார் காட்டம்




ஷா ஆலம் – மக்கள் வருமானமின்றி தவிக்கும் நிலையில் வங்கிகளும் அரச சார்பு நிறுவனங்களும் (ஜி.எல்.சி.) மேல் மட்ட அதிகாரிகளுக்கு போனஸ், அலவன்ஸ் என வாரி வழங்குவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக மக்களில் பெரும்பகுதியினர் இன்னலை அனுபவித்து வரும் வேளையில் குறிப்பிட்ட சில தரப்பினர் மட்டும் லாபத்தை அள்ளிக் குவிப்பது கவலையளிக்கும் விஷயமாக உள்ளது என அவர் கூறினார்.

கடனைத் திரும்பச் செலுத்துவதை ஒத்தி வைப்பதற்கு அடிமட்ட மக்கள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாத வங்கிகள் பணியாளர்களுக்கு சம்பள உயர்வையும் பங்குதாரர்களுக்கு லாப ஈவையும் வழங்கும் அளவுக்கு கடந்தாண்டில் லாபத்தை ஈட்டியது எப்படி என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

சம்பந்தப்பட்டத் தரப்பினர் லாபம் ஈட்டியது குறித்து நாங்கள் கேள்வியெழுப்பவில்லை. ஆனால், சிரமத்திலும் துன்பத்திலும் உள்ள எளிய மக்களை பலிகடாவாக்கி சில தரப்பினர் ஈட்டிய லாபம்தான் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றார் அவர்.

நோய்த் தொற்றின் தாக்கத்தை தாங்கிக் கொள்ளுங்கள் என சாதாரண மக்களுக்கு அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது. அதேசமயம், மேல் நிலையில் உள்ள வர்த்தக மற்றும் நிர்வாகத் தரப்பினருக்கு அந்த கடப்பாட்டிலிருந்து விலக்களிக்கிறது. இது உண்மையில் வேதனையைத் தருகிறது என்று அவர் சொன்னார்.

பணக்காரர்களின் வாழ்க்கை எந்தவொரு பாதிப்பும் இன்றி சீராக செல்லும் நிலையில் சாதாரண மக்கள் கடும் சுமையை தாங்கி நிற்கும் அவலத்தை பெரிக்கத்தான் நேஷனல் அரசாங்கம் உணர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## 1,800 சட்டவிரோத தொழிற்சாலைகளுக்கு

## நிபந்தனைகளை பின்பற்றக் கோரும் உத்தரவு



ரவாங் – செலாயாங் நகராண்மைக்கழகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1,800 தொழிற்சாலைகளுக்கு நிபந்தனை மற்றும் அமலாக்கத்தை பின்பற்றக் கோரும் உத்தரவு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள் லைசென்ஸ், திட்டமிடல் அனுமதி மற்றும் கட்டிட அனுமதியைக் கொண்டிராததோடு நில தகுதி பிரச்னையையும் எதிர்நோக்கியுள்ளதை கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார். இந்த உத்தரவின் நோக்கத்தை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்வதற்கும் சட்டவிரோத தொழிற்சாலைகளை சட்டப்பூர்வமாக்கும் பணிகளை எளிதாக்குவதற்கும் ஏதுவாக செலாயாங் நகராண்மைக்கழகத்தின் திட்டமிடல் பிரிவுடன் சந்திப்பு ஒன்று நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் முடிவுகள் எட்டப்படுவதற்கு ஏதுவாக தொடர் நடவடிக்கைகள் குறித்து விரிவான விளக்கத்தை சம்பந்தப்பட்ட தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு வழங்குவது நமது கடமையாகும் என அவர் சொன்னார். இந்த உத்தரவு கடிதங்கள் குறித்து தொழிற்சாலை உரிமையாளர்கள் அச்சமடைய வேண்டியதில்லை எனக் கூறிய அவர், மாறாக, மேலும் கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாவதை தவிர்க்க சம்பந்தப்பட்டத் தரப்பினருடன் ஒத்துழைக்க அவர்கள் முன்வர வேண்டும் என்றார்

## சிலாங்கூரில் 83 விழுக்காட்டு முன்களப் பணியாளர்கள்

# தடுப்பூசி பெற்றனர்

ஷா ஆலம் – சிலாங்கூரில் 83 விழுக்காட்டு முன்களப் பணியாளர்கள் முதல் கட்ட கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பெரும்பாலான முன்களப் பணியாளர்கள் தடுப்பூசியைப் பெற்றுள்ள நிலையில் சுமார் 4,000 பேருக்கு மட்டுமே இன்னும் அந்த தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்று அவர் சொன்னார்.

தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் முதல் கட்டம் வரும் ஏப்ரல் மாதவாக்கில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் சொன்னார்.

முதல் கட்ட தடுப்பூசித் திட்டம் முடிவுக்கு வந்ததும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட தடுப்பூசித் திட்டத்தை முன்னெடுப்பது எனது இலக்காகும். பதிவு மற்றும் தடுப்பூசி செலுத்தும் மையங்களை தயார் செய்வது போன்ற பணிகளை இது உள்ளடக்கியிருக்கும் என்றார் அவர்.

இப்பணிகளை மாநில மற்றும் மாவட்ட நிலையிலான சுகாதார அதிகாரிகள் மேற்கொள்வர் என்று தேசிய தடுப்பூசித் திட்ட ஒருங்கிணைப்பு அமைச்சர் கைரி ஜமாலுடினுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு சிலாங்கூர் உந்து சக்தியாக விளங்குவதால் இம்மாநிலத்தில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் இயக்கத்தை துரிதப்படுத்துவதில் தாங்கள் முனைப்பு காட்டி வருவதாக அவர் மேலும் சொன்னார்.

# விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்கு 70 லட்சம் வெள்ளி மானியம்- சிலாங்கூர் எம்.எஸ்.என். பெற்றது

ஷா ஆலம் – விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக சிலாங்கூர் மாநில விளையாட்டு மன்றம் 70 லட்சம் வெள்ளி மானியத்தை மாநில அரசிடமிருந்து பெற்றது.

வசதிகளை மேம்படுத்துவது, அடிமட்ட நிலையிலான திட்டங்களை மேற்கொள்வது, விளையாட்டு சாதனங்களை வாங்குவது, விளையாட்டாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு அலவன்ஸ் வழங்குவது ஆகிய நோக்கங்களுக்கு அந்த மானியம் பயன்படுத்தப்படும் என்று சிலாங்கூர் மாநில விளையாட்டு மன்றத்தின் நிர்வாக இயக்குநர் முகமது நிஸாம் மர்ஜூக்கி கூறினார்.




இவை தவிர, அடுத்தக் கட்ட விளையாட்டாளர்களுக்கு பயிற்சி வழங்குவது, விளையாட்டு உபகரணங்கள், சத்துணவு, அடைவு நிலை ஆய்வு, தன்முனைப்பு பயிற்சி போன்ற நோக்கங்களுக்காகவும் அந்த நிதி பயன்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மாநிலத்தில் பல்வேறு விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாநில அரசு ஆண்டுதோறும் 70 லட்சம் வெள்ளி நிதியை ஒதுக்கீடு செய்யும் என்று விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் கைருடின் ஓத்மான் கடந்தாண்டு மார்ச் மாதம் கூறியிருந்தார்.

அந்த தொகை சிலாங்கூர் விளையாட்டு மன்றத்தின் வாயிலாக பயன்படுத்தப்படும் எனக் கூறிய அவர், ஒதுக்கப்படும் நிதியில் பாதி தொகை சுக்மா போட்டிக்கு விளையாட்டாளர்களைத் தயார் படுத்த பயன்படுத்தப்படும் என்றார்.

# செந்தோசா தொகுதி ஏற்பாட்டில் ‘60 நாட்களில் ஆரோக்கிய வாழ்வு’ போட்டி நிகழ்வு




கிள்ளான் – செந்தோசா சட்டமன்றத் தொகுதி ஏற்பாட்டில் 60 நாட்களில் ஆரோக்கியமான வாழ்வு எனும் போட்டி நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த போட்டியில் ஆரோக்கிய வாழ்வு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவதோடு 60 நாட்களில் உடை எடையைக் குறைப்பவர்களுக்கு ரொக்கப் பரிசும் வழங்கப்படுவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார்.

உடலாரோக்கியத்தை உறுதி செய்வதன் மூலம் நோய் நொடியிலிருந்து விடுபட்ட சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். இங்குள்ள செந்சோசா சட்டமன்றத் தொகுதி சேவை மையத்தில் இந்த ஆரோக்கிய போட்டி நிகழ்வைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். இந்த போட்டியை முன்னிட்டு உடல எடையைக் குறைப்பது தொடர்பான பயிற்சிகளும் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும். இந்த பயிற்சிகளை அனுபவமிக்க பயிற்றுநர்கள் வழஙகுவர் என்றார் அவர்.

இந்த போட்டியில் 21 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட தொகுதியைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலரும் பங்கு கொள்ளலாம். அறுபது நாட்களில் எடையைக் குறைப்பவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போட்டியில் முதல் நிலை வெற்றியாளருக்கு 1,000 வெள்ளியும் இரண்டாம் நிலை வெற்றியாளருக்கு 700 வெள்ளியும் மூன்றாம் நிலை வெற்றியாளருக்கு 500 வெள்ளியும் அடுத்த நிலைகளில் வருவோருக்கு 300 வெள்ளி மற்றும் 100 வெள்ளியும் பரிசாக வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் 8ஆம் தேதியிலிருந்து மே மாதம் 6ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டிக்கு 20 வெள்ளி நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படும். இந்த நுழைவுக்கட்டணம் சொந்தோசா தொகுதியிலுள்ள அன்பு இல்லத்தின் பராமரிப்புப் பணிக்கு பயன்படுத்தப்படும்.

# சைக்கிளோட்டம், புட்சால் போட்டிகளை மே மாதம் நடத்த சிலாங்கூர் திட்டம்

ஷா ஆலம் – விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சிலாங்கூர் மாநிலத்தை வலம் வரும் சைக்கிளோட்டப் போட்டியை வரும் மே மாதம் நடத்த சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த போட்டியை நடத்துவது தொடர்பான ஏற்பாடுகள் தற்போது விவாத நிலையில் உள்ளதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் கைருடின் ஓத்மான் கூறினார். இந்த போட்டியை வரும் மே மாத தொடக்கத்தில் நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக சிலாங்கூர் கினி பத்திரிகைக்கு அளித்து பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

சைக்கிளோட்டப் போட்டி தவிர்த்து புட்சால் மற்றும் மராத்தோன் போட்டிகளையும் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

இதனிடையே, சுக்மா போட்டி குறித்து கருத்துரைத்த அவர், அப்போட்டியில் பங்கேற்கும் விளையாட்டாளர்களுக்கான பயிற்சிகள் விரைவில் தொடங்கும் என்றார். நிர்ணயிப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி பயிற்சிகள் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்காக மாநில விளையாட்டு மன்றத்துடன் தாங்கள் பேச்சு நடத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.



**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412

selangor kini apr 2021.indd 16 02-Apr-21 9:04:40 PM